# தேன்பாகு



கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம்

# தேன் பாகு

(சிறுவர் கதைகள்)

கி.வா. ஜகந்நாதன்

அமுத நிலையம் லிமிடெட்
46, ராயப்பேட்டை ஹைரோடு
சென்னை-600 014

உரிமை பதிவு.
ஏப்ரல் 1991

| | | |
|---|---|---|
| Name | : | THEN PAGU |
| Language | : | Tamil |
| Author | : | K.V. JAGANATHAN |
| Subject | : | Children stories |
| Size | : | Crown 1 X 8 |
| Publisher | : | Amudha Nilayam Ltd. |
| & | | 46, Royapettah High Road, |
| Copy Right | | Madras - 600 014. |
| Pages | : | 64 |
| Paper | : | White Printing 11.2 MANDYA |
| Type | : | 12 Point |
| Price | : | Rs. 7-00 (Rupees Seven Only) |
| Artist | : | Maniam Selvan |
| Printer | : | SRI ESEM PRINT HOUSE |
| | | 132, Jani John Khan Road, |
| | | MADRAS - 600 014. |
| | | PHONE : 833231 |
| Binding | : | Card Board |

## பதிப்புரை

கதைகள் கேட்பதற்குக் குழந்தைகள் விரும்புவர். அவர்கள் சுவைக்கும்படி கதை சொல்லப் பழங்காலத்தில் பாட்டிகள் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் குழந்தைகளின் தொணதொணப்புக்கு ஈடு கொடுக்க தினசரி கதைகளை ''இட்டுக்கட்டி''ச் சொல்வது வழக்கமாக இருந்தது.

அப்படி ''இட்டுக்கட்டி''ச் சொல்லப்பட்ட கதைகள் தாம் செவிவழியே தொடர்ந்து நாடோடிக் கதைகள் ஆயின.


அந்த நாடோடிக் கதைகளைத் தழுவி முன்னர் ''நாலு பழங்கள்'', ''நல்ல பிள்ளையார்'' ஆகிய இரு புத்தகங்களை வெளியிட்டோம். அதைத் தொடர்ந்து மூன்றாவதாகத் ''தேன் பாகு'' என்னும் இந்த நூலை வெளியிடுகிறோம். பொது மக்கள் ஆதரவு அளித்து உதவ வேண்டுகிறோம்.

அமுத நிலையத்தார்

## பொருள் அடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தேன் பாகு | 5 |
| 2. | ஏமாற்றம் | 9 |
| 3. | இட்டிலிக் குப்பன் | 13 |
| 4. | முனிவரும் அரசனும் | 16 |
| 5. | இட்டிலியும் மிளகாய்ப் பொடியும் | 20 |
| 6. | நம்பிக்கை | 26 |
| 7. | கண்ணாடியால் விளைந்த கலகம் | 29 |
| 8. | நரியின் தந்திரம் | 34 |
| 9. | ஆட்டின் வால் | 37 |
| 10. | அரசன் செய்த சோதனை | 40 |
| 11. | கிண்டியாய நமஹ | 44 |
| 12. | அத்திரி மாக்கு | 46 |
| 13. | கனவு பலித்தது | 49 |
| 14. | கத்திரிக்காய் ஜுரம் | 57 |

# தேன்பாகு



கோபாலன் தன்னுடைய உறவினர் வீட்டிற்கு வந்திருந்தான். அன்று அமாவாசை, இரவு தோசையைப் பலகாரமாக உண்டான், அதற்குத் தேன்பாகை விட்டார்கள். வெல்லம் காய்ச்சும் போது திரவப்பதத்திலே எடுத்து வைப்பார்கள். அதற்குத் தேன்பாகு என்று பெயர். அதைக் கோபாலன் முன்பு சாப்பிட்டறியாதவனாதலால் அதை மிகவும் சுவைத்து உண்டான். இன்னும் அதிகமாக உண்ணவேண்டும் என்ற ஆசை

அவனுக்கு இருந்தும் வெட்கத்தினால் கேட்கா மல், போட்டதைச் சாப்பிட்டு எழுந்தான்,

அந்தத் தேன்பாகை அந்த வீட்டுக்காரர்கள். ரேழிக்கு அருகில் உள்ள ஓர் அறையில் ஒரு பானையில் வைத்துத் தொங்க விட்டிருந்தார்கள் எறும்பு வராமல் இருக்க அப்படிச் செய்திருந் தார்கள். கோபாலன் அதனைக் கவனித்தான். இரவு யாரும் அறியாமல் அதை எடுத்து உண்ண வேண்டும் என்று தீர்மானித்தான்.

தான் விடியற்காலையில் எழுந்து ஆற்றுக்குச் சென்று நீராடுவது வழக்கமென்றும், அதனால் ரேழித் திண்ணையில் படுத்துக் கொள்வதாகவும் சொன்னான். அப்படியே அங்கேபடுத்திருந்தான். உறக்கமே வரவில்லை, தேன் பாகின் நினை வாகவே இருந்தான்,

நள்ளிரவு ஆயிற்று, மெல்ல எழுந்திருந்து அந்த அறையில் புகுந்து மேலே மிக உயரத்தில் தொங்க விடப்பட்டிருந்த தேன்பாகுச் சட்டியைப் பார்த்தான். அங்கே சார்த்தியிருந்த ஒரு கோலை எடுத்து அதனால் அந்தச் சட்டியின் அடியில் குத்தினான். அது பழைய சட்டியாதலால் பொத்துக்கொண்டுத் தேன்பாகு கீழே ஒழுகியது. ஆவென்று வாயைத் திறந்து அதைக் குடித்தான், தேன்பாகு தரதரவென்று விழுந்ததனால் அவன் மேலெல்லாம் அபிஷேகம் பண்ணியது போல் ஆயிற்று. உடம்பெல்லாம் தேன்பாகு; ஒரே பிசுக்கு.

ஏதாவது துணியிருக்குமா என்று சுற்று முற்றும் பார்த்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. அந்தப் பெரிய அறைக்கு அருகில் ஒரு சிறிய அறை இருந்தது. அதில் மெத்தை தைப்பதற்காகப் பஞ்சு வாங்கிப் போட்டிருந்தார்கள். அதில் விழுந்து புரண்டான். உடம்பெல்லாம் பஞ்சு ஒட்டிக் கொண்டது. புஸு புஸு வென்று உடம்பு முழுவதும் பஞ்சு மயமாக ஆகிவிட்டது. அந்தக் கோலத்தில் அங்கே இருக்கக் கூடாதென்று எண்ணி வாயிற்கதவைத் திறந்து வெளியே புறப்பட்டான்.

இரவு நேரத்தை எங்காவது கழித்துவிட்டு விடியற்காலையில் ஆற்றுக்குச் சென்று நீராடிய பிறகு வரலாம் என்ற நினைவுவர புறப்பட்டுச் சென்றான். போகும் வழியில் ஓர் ஆட்டுப்பட்டி இருந்தது. அதற்குள் புகுந்து ஆடுகளோடு ஆடாக முடங்கிக் கிடந்தான். எப்பொழுதப்பா விடியும் என்று காத்திருந்தான்.

அன்று ஆடு திருடும் கள்ளர்கள் வந்தார்கள் பெரிய ஆடாகத் திருடவேண்டுமென்று எண்ணித் தேடினார்கள். உடம்பெல்லாம் பஞ்சு மூடியிருந்ததனால் கோபாலனை அவர்கள் ஏதோ பெரிய ஆடு என்று நினைத்துத் தூக்கிக்கொண்டு போனார்கள். இடைவழியில், "இது என்ன, இவ்வளவு கனமாக இருக்கிறது!" என்று கீழே போட்டார்கள்.

அப்போது கோபாலன், ''நான் ஆடு அல்லடா!'' என்றான். அதைக் கேட்டவர்கள் இது ஏதோ பேயோ பிசாசோ என்று அஞ்சி ஓடி விட்டார்கள். பிறகு விடியற்காலை வேளையில் கோபாலன் ஆற்றுக்குச் சென்று நீராடி வீட்டை அடைந்தான்.

''நீ விடியற்காலையில் நீராடப் போகையில் சொல்லி விட்டுப் போகக் கூடாதா? கதவு திறந்திருந்ததனால் யாரோ உள்ளே புகுந்து தேன் பாகையெல்லாம் வீணாக்கி விட்டார்கள்'' என்று அந்த வீட்டுக்காரர்கள் சொன்னார்கள்.

''அப்படியா?, நான் நீராடப் போக வேண்டும் என்ற அவசரத்தில் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டேன்'' என்று அவன் சமாதானம் சொன்னான். ஆனாலும் அவ்வளவு தேன்பாகும் வீணாகி விட்டதே என்று அவனுக்கும் சற்று மனத்தில் வருத்தம் உண்டாயிற்று.



# ஏமாற்றம்

பெரிய மிராசுதார் அவர். அவருக்கு நூற்றுக் கணக்கான காணிகள் இருந்தன. நன்செய்யும் உண்டு. புன்செய்யும் உண்டு. நெல்லும் வாழையும் விளையும் நிலங்களும், கம்பும் கடலையும் விளையும் காடுகளும் அவருக்குச் சொந்தமாக இருந்தன. -அவ்வளவு பெரிய பணக்காரர், சென்னையில்

பெரிய மாளிகை கட்டிக்கொண்டு நாகரிக வாழ்க்கை வாழ ஆரம்பித்தார். நிலங்களைக் குத்தகைக் காரர்களிடமும் காரியஸ்தர்களிடமும் விட்டு விட்டு நகர வாழ்க்கையின் கோலாகலத்திலே நீந்தி விளையாடினார்.

அவருக்கு ஒரு பிள்ளை. அவன் காலேஜில் படித்தான்; பிறகு சீமைக்குப் படிக்கப் போனான். இந்தியாவில் இருந்த போது இந்நாட்டைப் பற்றி அவன் ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை. சீமைக்குப் போன பிறகு அங்கே ஏற்பட்ட நண்பர்களின் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் திண்டாடினான். இந்தியாவைப் பற்றிய சில புத்தகங்களைச் சீமையில் படித்தான்! இந்தியா விவசாய நாடு என்று அந்தப் புத்தகங்களின் மூலம் தெரிந்து கொண்டான். "பல காணிகளைப் படைத்த பணக்காரர்கள் சொந்த ஊரை விட்டு நகர வாழ்க்கையில் உள்ள மோகத்தால் நகருக்கு வந்து விடுகிறார்கள். கிராமத்திலோ நிலங்களை கூலிக்காரர்களும் குத்தகைக்காரர்களும் பார்க்கிறார்கள். இதனால் நிலம் சீர்குன்றி வளம் மங்கிப் போகிறது" என்று யாரோ புண்ணியவான் எழுதியிருந்தார். இந்த வாக்கியம் செல்வக் குமரன் உள்ளத்திலே தைத்தது. தன் தந்தையாரும் நகர வாழ்க்கையில் மோகம் கொண்டவரென்பதை உணர்ந்தான்.

ஒரு விதமாகச் சீமைப்படிப்பு முடிந்தது. தாய்நாட்டுக்குப் போனவுடன், முதல் வேலை

யாகக் கிராமம் சென்று, அங்கே சொந்தக்காரரை ஏமாற்றிவாழும் காரியஸ்தர்களின் அட்டூழியங்களைக் கண்டு பிடிப்பது என்ற உறுதியை மேற்கொண்டான். தாய்நாடு வந்தான், ஒருநாள் கிராமத்துக்குப் போனான்.

"இன்று நாம் நம் நிலங்களைப் பார்க்க வேண்டும்'' என்று சின்னதுரையிடமிருந்து உத்தரவு பிறந்ததைக் கண்டு காரியஸ்தர் ஆச்சரியப்பட்டுப் போனார்.

"அப்படியல்லவா இருக்க வேண்டும்?" என்று பாராட்டினார்.

சீமை சென்றுவந்த குமரன் நிலங்களைப் பார்வையிடச் சென்றான். கடலை விளைந்திருந்த தோட்டத்துக்குப் போனான். "இதோ இது கடலைத் தோட்டம். காய் விளைந்து முற்றி விட்டது. மகசூல் எடுக்க வேண்டியது தான்;" என்றார் காரியஸ்தர்.

குமரன் வரப்பருகில் உட்கார்ந்து கொண்டான். ஒரு கடலைச் செடியைத் தொட்டுப் பார்த்தான்; புரட்டினான், எதையோ தேடுவதைப் போல இருந்தது. 'இந்த ஆசாமிகள் பட்டப் பகலில் கொள்ளையடிப்பவர்கள் என்பது உண்மை. நாம் ஒன்றையும் கவனிக்க மாட்டோம் என்ற நினைவினால் பொய் சொல்லி ஏமாற்றுகிறான், இந்த மனுஷன். காய் விளைந்து விட்டதாம்! செடி முழுவதும் ஒரே இலையாக இருக்கிறது. ஒருகாயைக் கூடக் காணோம். நமக்கு


விஷயம் தெரியாதென்று நினைத்து விட்டானோ! குமரன் எண்ணம் ஓடியது. கோபம் கனன்றது.

"என்ன ஐயா! ஒரே புளுகாகப் புளுகுகிறீரே! காய் விளைந்து விட்டதென்று ஏன் பொய் சொல்லுகிறீர்?" என்று படபடப்போடு கேட்டான் சின்ன எஜமானன்.

"விளைந்து விட்டது என்பது பொய்யா? இதோ அடுத்த வாரத்தில் வெட்டப் போகிறோம்!"

"என்ன ஐயா! முழு மோசமாக இருக்கிறது. செடியில் ஒரு காயைக்கூடக் காணோம். நீர் அளக்கிறீரே!"

காரியஸ்தருக்கு உண்மை விளங்கியது அழுவதா, சிரிப்பதா என்று அவருக்கு யோசனை வந்துவிட்டது. "எஜமான் செடியைப் புரட்டிப் பார்த்ததற்குக்காரணம் இப்போதுதான் எனக்குத் தெரிந்தது. கடலைக்காய், செடியின் மேல் இருக்காது; வேரிலேதான் இருக்கும். அதனால் வேர்கடலை என்றுஇதைச் சொல்வார்கள். இதோ பாருங்கள்" என்று விளக்கிக் கொண்டே காரியஸ்தர் ஒருகொடியைப் பிடுங்கிக் காட்டினார். வேரில் கொத்துக் கொத்தாய்க் கடலைக்காய்கள் இருந்தன. தன்னைக் காரியஸ்தர் ஏமாற்ற வில்லை, கடலைச் செடிதான் ஏமாற்றி விட்ட தென்பதை, சீமைப் படிப்பில் தேர்ச்சி பெற்ற செல்வன் அப்போது தெளிந்தான்!




அந்தத் தாசில்தாரிடம் ஒரு சமையற்காரன் இருந்தான், அவனுக்குக் குப்பன் என்று பெயர் அவனுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சமையல் நன்றாகச் செய்வான்.

அவனுக்கு விசித்திரமான ஆசை ஒன்று தோன்றியது. தானும் ஏதாவது உத்தியோகம் பார்க்கவேண்டும் என்று எண்ணினான். ஒருநாள் தாசில்தாரிடம் நாணிக்கொண்டு, "எனக்கு ஓர் உத்தியோகம் பண்ணி வையுங்களேன்!" என்று சொன்னான்.

தாசில்தாருக்கு அதைக் கேட்டு ஆச்சரியமாக இருந்தது. "உனக்கா?" என்று கேட்டார்.

"ஆமாம் எனக்குத்தான். நீங்கள் மனசு வைத்தால் எனக்கு ஏதாவது உத்தியோகம் பண்ணி வைக்கலாமே!" என்றான்.

தாசில்தார் சிறிது யோசித்தார்; பிறகு, "நான் ஒரு மணியக்காரருக்குக் கடிதம் தருகிறேன், அதை அவரிடம் காட்டி அவர் சொல்கிற வேலையைச் செய்" என்றார். அப்படியே ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார்.

அவன் ஆவலோடு அதை வாங்கிக்கொண்டு குறிப்பிட்ட மணியக்காரரிடம் காட்டினான். அவர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு அந்தக் கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து, "இதைத் தின்னு" என்றார்.

குப்பன் உத்தியோகம் பார்ப்பதற்கு முன் இப்படித்தான் செய்யவேண்டும் போலிருக்கிறது என்று எண்ணி, அதை மிகவும் சிரமப்பட்டு மென்று விழுங்கினான். அதற்குள் அவனுக்கு விழி பிதுங்கிப் போய்விட்டது. இருந்தாலும் உத்தியோகம் பெறலாம் என்ற ஆசையில் எப்படியோ அந்தத் துண்டுகளில் ஒன்றுவிடாமல் மென்று விழுங்கி விட்டான்.

அதைக்கண்ட மணியக்காரருக்குச் சிரிப்பு சிரிப்பாக வந்தது. 'இவன் படு முட்டாள்' என்று உணர்ந்து கொண்டார். "சரி, இன்னும் ஒரு மாதம் கழித்து வா" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

ஒரு மாதம் ஆயிற்று; இரண்டு மாதங்களும் ஆயின, உத்தியோகத்துக்கு உத்தரவு வரவில்லை.

மறுபடியும் தாசில்தாரிடம் கெஞ்சினான். "வேறு மணியக்காரரிடம் சொல்லுங்கள்" என்றான்.

அவர் உடனே ஒரு காகிதத்தை எடுத்து எழுதத் தொடங்கினார். அப்போது குப்பன் உள்ளே ஓடிப்போய் ஒரு பெரிய இட்டிலியை எடுத்துக் கொண்டு வந்து, "இதன் மேல் எழுதித் தாருங்கள்" என்றான்.

தாசில்தாருக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏனப்பா இதன் மேல் எழுதச் சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"போன தடவை அந்த மணியக்காரர் நீங்கள் கொடுத்த காகிதத்தைத் தின்னச் சொன்னார். நான் கஷ்டப்பட்டு மென்று விழுங்கினேன். இப்பொழுதும் அப்படிச் செய்யச் சொன்னால் சங்கடமாக இருக்கும், இந்த இட்டிலியின் மேல் எழுதித் தந்தால் இதைச் சுலபமாகத் தின்று விடலாம்" என்றான்.

தாசில்தாருக்குச் சிரிப்பாக வந்தது. 'இந்த முட்டாளை அவர் ஏமாற்றி விட்டார்' என்று உணர்ந்து கொண்டார்.

"போடா, இட்டிலிக் குப்பா! உனக்கு அந்த வேலையெல்லாம் வேண்டாம். உன்னால் அந்தக் காகிதங்களையெல்லாம் தின்ன முடியாது. பேசாமல் இங்கே சமையற்காரனாகவே இருந்து விடு. உனக்குச் சம்பளம் கூடப் போட்டுத் தருகிறேன்" என்றார்.

அதுமுதல் அவனுக்கு இட்டிலிக்குப்பன் என்ற பெயர் நிலைத்து விட்டது.



# முனிவரும் அரசனும்

ஓர் அடர்ந்த காட்டில் ஒரு முனிவர் வாழ்ந்தார். அவருக்கு உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் நன்றாக வாழவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதற்காக அந்தக்காட்டில் தீ வளர்த்து நெய் சொரிந்து யாகம் செய்யலானார். எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புடையவராக அவர் இருந்ததால், காட்டில் உள்ளவிலங்குகள் அவருக்கு வேண்டிய பண்டங்களைக் கொண்டுவந்து கொடுத்தன. யானைகள் யாகத்துக்கு வேண்டிய

மரக் கொம்புகளைக் கொண்டு வந்து கொடுத்தன. அவற்றைச் சமித்து என்று சொல்வார்கள். குரங்குகள் மரங்களிலுள்ள மலர்களையும் பழங் களையும் கொண்டு வந்து கொடுத்தன. காட்டில் இருந்த பசுமாடுகள் அவருக்கு நிறையப்பாலை வழங்கின. அந்தப் பாலைத் தயிராக்கி வெண் ணெய் எடுத்து நெய்யாக்கி யாகத்துக்குப் பயன் படுத்தினார். அவருடன் சில சீடர்கள் இருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தார்கள்.

அந்த முனிவர் உலக நன்மைக்காக வேள்வி புரிவதை அறிந்த பலர் அங்கே வந்து அவரை வணங்கிவிட்டுப் போவார்கள். தங்களால் ஆன அரிசி முதலியவற்றைக் கொடுப்பார்கள். அங் கங்கே உள்ள அரசர்களும் வந்து அவருடைய யாகத்தைத் தரிசித்து அரிசி, பருப்பு முதலிய வற்றை நிறைய அளிப்பார்கள். ஒரு மாசம் முடிந்தவுடன் முனிவர் வந்திருந்தவர் எல்லோருக் கும் சாப்பாடு போடுவார். ஏழைகள் பலர் வந்து வயிறாரச் சாப்பிட்டுப் போவார்கள்.

ஒரு நாள் ஓர் அரசன் அங்கே வந்தான் அவன் பொல்லாத குணமுடையவன். தன் நாட்டுக் குடிமக்களுக்கு அதிகமாக வரி போட்டுத் துன் புறுத்துகிறவன். அவன் முனிவருடைய ஆசிரமத் துக்கு வந்து அங்கே நடைபெறும் யாகத்தையும் பலரும் வந்து அவருக்கு உதவி புரிவதையும்

பார்த்தான். அவரைக் கண்டு அவனுக்குப் பொறாமை உண்டாயிற்று நாமும் இப்படி யாகம் செய்தால் நம்மிடத்திலும் பலர் வருவார்கள், வந்து பணிவார்கள் என்று எண்ணினான்.

முனிவர் இருந்த காட்டுக்கு அடுத்த காட்டில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு யாகம் செய்யலானான். தன்னுடைய அரண்மனைச் சேவகர்களை அழைத்து வந்து யாகத்துக்கு வேண்டிய வேலைகளைச் செய்யச் சொன்னான். ஊரிலிருந்து நெய்யை வருவித்து யாகம் செய்தான். அப்போது யானைகள் அங்கே வந்தன. அவற்றை அடித்து ஓட்டினான். குரங்குகள் வந்தன. அவற்றைக் கல்லால் எறிந்து ஓட்டச் செய்தான். அந்த யாகத்துக்கு அவனுடைய பணியாட்கள் வந்தார்களேயன்றி வேறுயாரும் வரவில்லை.

பாதி யாகம் நடந்து கொண்டிருந்த போது சில யானைகள் துதிக்கை நிரம்ப நீரை முகந்து கொண்டுவந்து யாகத்தில் விசிறின. அக்கினி அவிந்து போயிற்று. அரசனால் துரத்தப்பட்ட யானைகள் அவை. அப்படியே அவன் வேலையாட்கள் துரத்திய குரங்குகள் அங்கே இலைகளையும் முள்ளையும் பறித்துப் போட்டன. முனிவர் செய்த யாகத்திற்கு விலங்குகள் உதவி செய்தன. ஆனால் இந்த அரசன் செய்த யாகத்திற்கோ அவை தடைகளை உண்டாக்கின. அரசன் இந்த நிலையை அறிந்து கோபம் கொண்டான். யாகத்தை நிறைவேற்ற முடியாது என்பதை அறிந்து கொண்டான். உண்மையான பக்தியுடனும் நம்பிக்கையுடனும் எல்லாப் பிராணிகளிடத்தும் அன்புடனும் செய்தால்தான் யாகம் பலிக்கும் என்ற உண்மை அவனுக்குத் தெரிய வந்தது.

"நாம் அரசனாக இருந்து என்ன பயன்? பணம் படைத்ததனால் ஒரு பயனும் இல்லை குணம் படைத்து யாருக்கும் அன்பாக இருந்து தவம் செய்தால்தான் உண்மையான மதிப்பு ஏற்படும். அப்போது யாகம் செய்தால் அது நிறைவடையும்" என்ற நல்ல புத்தி அவனுக்கு உண்டாயிற்று.

பிறகு அவன் யாகம் செய்வதை விட்டு விட்டு அடுத்த காட்டில் உள்ள முனிவரிடம் போனான். அவர் காலில் விழுந்து பணிந்தான். "முனிவர் பிரானே, தங்கள் பெருமையை உணராமல் அவம தித்தேன். நானும் யாகம் பண்ணி புகழ் பெறலாம் என்று எண்ணினேன். ஆனால் உண்மையான அன்பும் சிரத்தையும் இல்லாமல் பொறாமையால் யாகம் செய்யப் புறப்பட்டேன். விலங்குகளும் எனக்குத் துன்பத்தை உண்டாக்கின. தாங்கள் செய்யும் யாகத்தில் நான் காணும் காட்சிகளுக்கு நேர் விரோதமாக, நான் செய்யப் புகுந்த யாகத் தில் கண்டேன். அப்போது நான் செய்யத் தொடங்கியது நியாயமான யாகம் அன்று, என்ற புத்தி எனக்கு வந்தது. நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும்." என்று சொன்னான்.

"நீ ஒன்றும் குற்றம் செய்யவில்லையே; நான் செய்த யாகத்தை நீ தடுக்கவில்லையே!" என்று முனிவர் சொன்னார்.

அதன் பிறகு அந்த அரசனும் அவருக்கு வேண்டிய அரிசி முதலியவற்றை வழங்கி வர லானான்.



# இட்லியும் மிளகாய்ப் பொடியும்

ஒரு காக்கை வீதி வழியே பறந்து வந்து கொண்டிருந்தது. வீதியின் ஓரத்தில் ஒரு கிழவி இட்டிலிவிற்றுக்கொண்டிருந்தாள். கூடைக்குள்ளே சில இட்டிலிகளும், மேலேஇருந்த தட்டில் ஐந்தாறு

இட்டிலிகளும் இருந்தன, காக்கை அந்த இட்டிலி களைப் பார்த்தது. அதன் வாயில் நீர் ஊறியது.

கிழவி எங்கேயோ கவனம் இன்றிப் பார்த்துக் கொண்டிருந்த சமயம் பார்த்து அந்தக் காக்கை ஓர் இட்டிலியைக் கவ்வியது; உடனே வேகமாகப் பறந்து போயிற்று! பாவம் கிழவி உரக்கக் கத்தி னாள். ஒரு பயனும் இல்லை.

இட்டிலியைக் கவ்விக்கொண்டு வந்த காக்கை ஊருக்கு வெளியே ஒரு மரத்தின்மேல் போய் உட் கார்ந்தது. அது வாயில் ஓர் இட்டிலியுடன் வரு வதை நரி கவனித்துப் பார்த்தது. எப்படியாவது அந்த இட்டிலியை ருசி பார்க்க வேண்டும் என்ற ஆசை அதற்கும் உண்டாயிற்று.

அந்த மரத்தடிக்கு நரி விரைவாக வந்தது. மேலே உள்ள காக்கையைப் பார்த்து, "தம்பி, இந்த இட்டிலியை நீ எப்படி எடுத்துக் கொண்டு வந்தாய்? உன் சாமார்த்தியமே சாமார்த்தியம்!" என்று புகழ்ந்து பேசியது. காக்கை வாயில் கவ்விய இட்டிலியுடன் மரத்தின் மேலேயே இருந்தது.

நரி, இனியேல் நேரே கெஞ்சிக் கேட்டுத்தான் இட்டிலியில் கொஞ்சம் வாங்க வேண்டும் என்று தெரிந்து கொண்டது. ஆகவே, "தம்பி, எனக்கு வெகு நாட்களாகவே இட்டிலி தின்ன வேண்டும் என்று ஆசையாக இருந்தது. நான் ஊருக்குள்ளே போய் ஒன்றும் திருட முடியாதே. நண்டையும்

தவளையையும் தின்று தின்று சலித்துப் போய் விட்டது. நீ தான் பாக்கியசாலி. மனிதர் தின்னும் தின்பண்டங்களெல்லாம் உனக்குக் கிடைக்கின்றன" என்று நயமாகச் சொல்லத் தொடங்கியது.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த காக்கை தன் வாயிலிருந்த இட்டிலியை மரத்தில் இருந்த சிறிய பொந்தில் வைத்துவிட்டு, "கா, கா" என்று கூவியது.

நரி மறுபடியும் காக்கையைப்பார்த்து, "தம்பி நீ பிறருக்குக் கொடுக்காமல் எதையும் உண்ணாதவன். இந்த இட்டிலியைத் தின்ன உன் உறவினர்களை 'கா, கா' என்று அழைக்கிறாயே, நான் இருக்கிறேன். என்னையும் உன் சொந்தக்காரனாக எண்ணி எனக்கு ஒரு துண்டாவது கொடு" என்று கெஞ்சிக் கேட்டது.

காக்கைக்குக் கொஞ்சம் மனசு இரங்கியது. அந்த இட்டிலியை மறுபடியும் கவ்விக்கொண்டு கீழே இருந்த ஒரு கல்லின் மேல் உட்கார்ந்து கொண்டது.

அதற்குள் நரி என்னவோ நினைத்துக் கொண்டது; "தம்பி ஒரு விஷயம் சொல்கிறேன், கேட்கிறாயா? இந்த இட்டிலி வெறும் இட்டிலியாக இருக்கிறது. மனிதர்கள் மிளகாய்ப் பொடி என்றும், சட்டினி என்றும் சில பதார்த்தங்களை இதற்கு உபயோகிப்பார்களாம். நாமும் அந்த

மாதிரி ஒன்றோடு இட்டிலியைச் சாப்பிடலாம் என்று தோன்றுகிறது. உனக்குச் சம்மதமாக இருந்தால் அப்படிச் செய்யலாம்" என்றது.

காக்கை, "இப்போது மிளகாய்ப் பொடிக்கு எங்கே போவது?" என்று கேட்டது.

"இதுதானா பிரமாதம்? இட்டிலி எப்படிக் கிடைத்ததோ, அது மாதிரி மிளகாய்ப் பொடி கிடைக்கும். நீ மனசு வைத்தால் எதுதான் கிடைக்காது? நீ இப்போதே ஊருக்குள் போய் மிளகாய்ப் பொடியையும் சம்பாதித்துக் கொண்டு வந்துவிடு. அதுவரை நான் இதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறேன்" என்று தந்திரமாகச் சொல்லியது.

காக்கை அந்த வார்த்தைகளை உண்மையாக நம்பி, மறுபடியும் ஊரை நோக்கிப் புறப்பட்டது.

நரி சிறிது நேரம் சும்மா இருந்தது. அதனுடைய துஷ்டகுணம் அதைச் சும்மா இருக்க விடவில்லை. அந்த இட்டிலிக்குப் பக்கத்தில் உட்கார்ந்த நரி அதைத் தொட்டுக் கொண்டே இருந்தது. பின்னும் கொஞ்ச நேரம் ஆயிற்று நரியினால் ஆசையை அடக்க முடியவில்லை. இட்டிலியைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டது. இதை இப்படியே வாயில் போட்டுக கொண்டு ஓடி விடலாமே! என்று எண்ணம் உண்டாயிற்று. ஆனாலும் அதற்குத் தைரியம் ஏற்படவில்லை.

'இதைக் கொஞ்சம் நாக்கில் வைத்துப் பார்க்கலாம்' என்ற எண்ணம் அடுத்தபடியாகத்

தோன்றியது. மெதுவாக நாக்கினால் அதை நக்கிப்பார்த்தது. அப்போது நரிக்கு இட்டிலியை ஒரே விழுங்காக விழுங்கிவிட வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. 'காக்கை வந்தால்...?' என்று எண்ணியது. 'வந்தால் என்ன செய்யும்? நாம் ஓடிப்போய் விடலாம்' என்று அடுத்தபடி ஓர் எண்ணம் வந்தது.

உடனே, துணிந்து இட்டிலியின் ஒரு பாகத்தைக் கடித்துத் தின்றது. அந்தச்சமயத்தில் காக்கை திரும்பி வந்து விட்டது. வாயில் ஒரு சிறு கிண்ணத்தோடு பறந்து வந்தது. அந்தக் கிண்ணம் நிறைய மிளகாய்ப் பொடி இருந்தது. வரும்போதே நரியைப் பார்த்தது. நரி இட்டிலியின் ஒரு பாகத்தைக் கடித்துக் கொண்டிருந்தது. நரி முழுவதையுமே விழுங்கிவிடப் போகிறது என்றே அது எண்ணியது. உடனே இரைந்த குரலில், "நரி அண்ணா, அவசரப்படாதே அந்த இட்டிலியை நீயே தின்னலாம், இந்த மிளகாய்ப் பொடியை போட்டுக் கொண்டு தின்னலாம். எனக்கு வேண்டாம். பாவம் இவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருந்தாயே. எனக்கு வேறு இட்டிலி கிடைக்கும்" என்றுசொல்லிக் கொண்டே பக்கத்தில் வந்தது.

நரிக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. இட்டிலி முழுவதையும் தானே சாப்பிட வேண்டும் என்ற பேராசை அதற்கு இருந்தது. ஆனாலும் காக்கை இப்படிச் சொல்லும் என்று அது எதிர்

பார்க்க வில்லை. ''என்ன தம்பி சொல்கிறாய்?'' என்று சொல்லிக் கையில் இருந்த இட்டிலியை நரி கீழே வைத்தது. வைத்தது தான் தாமதம்; மறு கணத்தில் காக்கை தன் வாயில் பிடித்திருந்த கிண்ணத்திலிருந்த மிளகாய்ப் பொடியை அப்படியே நரியின் கண்மேல் கொட்டி விட்டு அது கண்ணைத் துடைப்பதற்குள் இட்டிலியைக் கவ்விக்கொண்டு பழைய மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டது.

நரியோ மிளகாய்ப்பொடி விழுந்ததனால் கண்ணைத் திறக்க முடியாமல் கஷ்டப்பட்டது; எரிச்சல் தாங்க முடியவில்லை. "ஐயோ! ஐயோ!" என்று கதறியது.

காக்கை, "நரியண்ணா, மிளகாய்ப் பொடி எப்படி இருக்கிறது! இட்டிலியினால் உன்னுடைய நாக்கில் நீர் சுரந்தது. இப்போது மிளகாய்ப் பொடியினால் கண்ணிலே நீர் சுரக்கிறது. நல்ல வேளை! இவ்வளவு நேரத்தில் இட்டிலியை விழுங்காமல் இருந்தாயே! உனக்கு வந்தனம்'' என்று சொல்லிவிட்டு இட்டிலியைத் தின்றது.



# நம்பிக்கை

கங்கைக் கரையில் ஒருபிராமணர் கங்கையின் மகாத்மியத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். 'கங்கையில் நீராடினால் எல்லாவிதமான பாவங்களும் போய்விடும். கைலாசம் போவது ஏன்?'' என்று சொன்னார்.

கைலாசத்திலிருந்த பரமசிவனைப் பார்த்துப் பார்வதி, ''கங்கையில் முழுகினவர் எல்லோரும் பாவங்கள் நீங்கிக் கைலாசத்துக்கு வந்துவிட்டால் இங்கே இடம் கொள்ளாதே!'' என்றார்.

பரமசிவன், ''போடி, பைத்தியக்காரி! கங்கையில் குளிப்பவர்கள் எல்லோரும் நம்பிக்கையுடன்

குளிக்கிறார்களா? யார் உண்மையான நம்பிக்கை யுடன் நீராடுகிறார்களோ, அவர்களுக்குத்தான் கைலாசம் கிடைக்கும்'' என்றுசொன்னார். ''அதை உனக்குக் காட்டுகிறேன் வா, நாம் இருவரும் கிழவன் கிழவியைப்போல அங்கே போய் ஒரு திருவிளையாடல் பண்ணலாம்'' என்றார்.

அப்படியே அவ்விருவரும் கிழவன் கிழவி யாகக் கங்கைக்கரைக்கு வந்தார்கள், நீராடினார் கள். அப்போது கிழவர் நீரோடு போய் விட்டார். கிழவியாக வந்த பார்வதி, ''ஐயோ! யாராவது என் கணவரை மீட்கமாட்டீர்களா?'' என்று கதறினாள்.

ஒருவர், ''இதோ நான் நீந்திப்போய் இழுத்து வருகிறேன்'' என்றபொழுது கிழவியாக இருந்த பார்வதி, ''ஒரு பாவமும் செய்யாதவர் யாரோ அவர்தாம் அவரை மீட்க முடியும். மற்றவரால் முடியாது' என்றாள். அதைக் கேட்டவர் தாம் செய்த பாவங்களை எண்ணிச் சும்மா இருந்து விட்டார். இப்படியே வேறு சிலரும் வந்து கிழவி சொன்னதைக் கேட்டுப் பிரமித்து நின்றுவிட்டார் கள்.

அப்போது பலசாலியான ஒருவன் வந்தான். தான் கிழவரை மீட்டு வருவதாகச் சொன்னான். அவனிடமும் 'ஒரு பாவமும் செய்யாதவர்களே அவரை மீட்க முடியும்'' என்றாள். அவன் ''அப்ப டியா? இப்போதுதான் புராணம் வாசித்தவர் சொன்னார், கங்கையில் மூழ்கினால் எல்லாப்

பாவங்களும் போய்விடும் என்றார். இதோ நான் ஒரு முழுக்குப் போடுகிறேன்." என்று சொல்லி மூழ்கி எழுந்தான். "இப்போது என் பாவமெல்லாம் போய்விட்டன. இதோ அவரை மீட்கிறேன். என்று கங்கையில் குதிக்கப் போனான்.

அப்போது பார்வதியும் பரமசிவனும் தம் சுய உருவத்தில் தோன்றி அவனுக்கு அருள் பாலித்தார்கள். பிறகு கைலாசம் போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கே பார்வதியிடம் "பார்த்தாயா? புராணம் கேட்ட எத்தனை பேருக்கு நம்பிக்கை இருந்தது. அந்தப் புராணத்தைச் சொன்னவர்க்கே இல்லையே ஒருவன்தானே முழு நம்பிக்கையோடு வந்தான்" என்று பரமேசுவரன் திருவாய் மொழிந்தருளினான். பார்வதி சிரித்துக் கொண்டாள்.



# கண்ணாடியால் விளைந்த கலகம்

சீன தேசத்தில் முதல் முதலாக முகம் பார்க்கும் கண்ணாடி வந்தபோது அதை மிகவும் சில பேர்களே வாங்கி வைத்துக் கொண்டார்கள். பெரிய பணக்காரர்கள் அதை வாங்கி மறைவாக வைத்துக் கொண்டு, அவ்வப்போது தம்முடைய முகத்தை அதில் பார்த்துக் கொண்டார்கள்.

ஒரு செல்வர் அதிக விலை கொடுத்து ஒரு கண்ணாடியை வாங்கினார். அதை யாருக்கும் தெரியாமல் ஒரு பெரிய பெட்டிக்குள் வைத்துக் கொண்டார். யாரும் பார்க்காத நேரத்தில் அந்தப் பெட்டியிடம் சென்று அதைத் திறந்து கண்ணாடியைப் பார்ப்பார். அதில் தன் முகம் தோன்றுவது கண்டு மகிழ்ச்சி அடைவார். இப்படிச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்து பிறகு பெட்டியை மூடி விடுவார்.

ஆரம்பத்தில் சிலகாலம் இதை யாரும் கவனிக்கவில்லை. சிலநாட்கள் கழிந்தன. அவருடைய மனைவி அவர் தனியே உள்ளே போய்க்கதவை மூடிக் கொண்டு என்னவோ செய்துவிட்டு வருவதைக் கவனித்தாள்...ஒவ்வொரு நாளும் அந்தச் செல்வர் ஒருவரும் அறியாதபடி அப்படிச் செய்ததனால் அவளுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவரைக் கேட்காமல் உண்மையை தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் பிறந்தது.

ஒரு நாள் அவர் வீட்டில் இல்லாதபோது அந்த அறையைத் திறந்து உள்ளே போனாள். மறுசாவி போட்டுப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். அதில் இருந்த கண்ணாடியில் அவள் முகம் தெரிந்தது. ஆனால் அது தன் முகம் என்று அவள் தெரிந்து கொள்ளவில்லை. யாரோ ஒரு பெண் மணியைத் தன் கணவர் அந்தப் பெட்டிக்குள் ஒளித்து வைத்திருக்கிறார் என்று எண்ணினாள். அவளுக்குத் தன் கணவர் மேல் கோபம் வந்தது.

அன்று கணவர் வந்தவுடன் "உங்கள் திருட்டுத்தனம் எங்களுக்குத் தெரிந்து விட்டது" என்று கோபமாய்ச் சொன்னாள்.

"என்ன திருட்டுத்தனத்தைக் கண்டு விட்டாய்?" என்று செல்வர் கேட்டார்.

"நான் உங்களை நல்லவர் என்று எண்ணியிருந்தேன். நீங்கள் பொல்லாதவர் என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன்" என்று அவள் சொன்னாள்.

"என்ன தெரிந்து கொண்டாய்? அதைச் சொல்" என்றார் அவள் கணவர்.

"அதைச் சொன்னால் வெட்கக்கேடு; ஊராரிடம் சொன்னால் மானமே போய் விடும்" என்றாள் அவர் மனைவி.

"இன்னதென்று சொல்லாமல் ஏன் இப்படிக் கோபமாகப் பேசுகிறாய்?" என்று மறுபடியும் அவர் கேட்டார்.

"நீங்கள் வேறு ஒரு பெண்ணை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்று குற்றம் சாட்டினாள் அவள்.

"வேறு பெண்ணா? என்ன உளறுகிறாய்!"

"நானா உளறுகிறேன்? உள்ளதைச் சொன்னால் எரிச்சல் என்பார்கள். நீங்கள் ஒவ்வொரு

நாளும் மறைவாக உள்ளே போய் என்னவோ செய்கிறீர்களே என்று கவனித்தேன். குட்டு வெளிப்பட்டது. நீங்கள் வேறு ஒரு பெண்ணை உள்ளே அந்தப் பெட்டியில் வைத்திருக்கிறீர்கள் என்பது இன்றைக்கு எனக்குத் தெரிந்து விட்டது. இனிமேல் உங்களோடு வாழ்வதற்கு எனக்கு விருப்பம் இல்லை. அவளையே கட்டிக் கொண்டு அழுவுங்கள்'' என்று அழத் தொடங்கினாள்.

அவள் கணவர் ஒன்றும் தெரியாமல் விழித்தார். அப்போது அங்கே ஒரு புத்த சந்நியாசி வந்தார். அந்தக் காலத்திலேயே சீன தேசத்தில் புத்த மதம் பரவியிருந்தது. அங்கங்கே புத்தசன்னியாசிகள் இருந்துமக்களுக்கு உபதேசம் செய்துவந்தார்கள். அவர்கள் தம்தலையை மொட்டையடித்திருப்பார்கள். அவர்களை பிட்சுகள் என்பார்கள்,

வீட்டுக்குள் வந்த பிட்சு கணவன் மனைவி இருவரும் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தார். ''ஏன் சண்டை போடுகிறீர்கள்?'என்று அவர் கேட்டார்.

''இவர் வேறு ஒரு பெண்ணைக் கொண்டு வந்து இந்த அறையில் பெட்டியில் வைத்திருக்கிறார். எனக்குத் தெரியாமல் ஒவ்வொருநாளும் அவளைப் பார்த்துப் பேசி வருகிறார்'' என்று அவள் குறை கூறினாள்.

''அப்படி நான் செய்யவில்லை, இவள் சொல்வது வீண்பழி'' என்றார் கணவர்.

"இவா சொல்வது பொய் என்பதை நானே நிரூபிக்கிறேன். இந்த அறைக்குள் வாருங்கள் சுவாமி!' என்று சொல்லிப் புத்த பிட்சுவை அவள் உள்ளே அழைத்துச் சென்றாள்.

"அந்தப் பெட்டியை நீங்களே திறந்து பாருங்கள்" என்றாள்.

அந்த சந்நியாசி கண்ணாடியை அதுவரையில் பார்த்ததில்லை. இப்போது பெட்டியைத் திறந்து பார்த்தார். கண்ணாடியில் அவருடைய மொட்டைத் தலையும் முகமும் தெரிந்தன. அந்த முகம் தம்முடையது என்பதை அவர் தெரிந்து கொள்ளவில்லை. உடனே அவர், "பெண்ணே, நீ கவலைப்படாதே; இந்தப் பெண்' அவமானம் தாங்காமல் தன் தலையை மொட்டையடித்துக் கொண்டு விட்டாள்'' என்று கூவினார்.

அதைக்கேட்ட செல்வர் பிரமித்துப் போய் நின்றார்.

∴ ∴ ∴




ஒரு கிழவி வடைசுட்டு விற்றுக் கொண்டிருந்தாள். காக்கை ஒன்று அவள் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு வடையைக் கொத்திக் கொண்டு பறந்து போய் விட்டது.

அந்தக் காக்கை ஒரு மரத்தில் அமர்ந்து வடையை வாயில் பற்றிக்கொண்டு தின்னத் தொடங்கியது. அப்போது ஒரு நரி அங்கே வந்தது. அந்தக் காக்கையினிடமிருந்து அந்த வடையைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று அது எண்ணியது.

“காக்காயே, காக்காயே, நீ நன்றாகப் பாடு வாய் என்று பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். உன் பாட்டைக் கேட்டு மகிழ வேண்டும் என்று ஆசைப்படுகிறேன், ஒரு பாட்டுப்பாடு” என்று நரி சொல்லியது. காக்கை பாட்டுப்பாட வாயைத் திறக்கும்போது வடை கீழே விழுந்துவிடும் என் றும் அதை எடுத்துக்கொண்டு ஓடிவிடலாம் என் றும் எண்ணியது.

காக்கை கொஞ்சம் தந்திரசாலி. தன் வாயில் வைத்திருந்த வடையைக் காலின் கீழ் வைத்து அமிழ்த்திக்கொண்டு, “கா,கா” என்று கரைந்தது. தான் செய்த தந்திரம் பலிக்கவில்லையே என்று எண்ணிய நரி மற்றொரு தந்திரம் செய்ய எண்ணி யது;

“காக்காயே, நீ எவ்வளவு அழகாகப் பாடு கிறாய்! நானும் எவ்வளவோ பாட்டைக் கேட் டிருக்கிறேன். இப்படி இனிமையாகப் பாடுவதைக் கேட்டதே இல்லை” என்று நரி காக்கையைப் புகழ்ந்தது. அதைக் கேட்ட காக்கைக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

“நீ நன்றாகப் பாடுகிறாயே! உனக்கு நடனம் செய்யக்கூடத் தெரியும் என்று சொல்கிறார்கள். உன் பாட்டைக்கேட்டு மகிழ்ச்சி பெற்ற எனக்கு உன் ஆனந்த நடனத்தைக்கண்டு களிக்கவும் ஆசையாக இருக்கிறது. கொஞ்சம் நடனம் ஆடிக் காட்டு பார்ப்போம்” என்றது.


அந்தப் புகழ்ச்சியினால் மயங்கிய காக்கை உடனே காலைத் தூக்கித்தூக்கி நடனம்செய்யத்

தொடங்கியது. அப்போது அதன் காலின் கீழ் இருந்த வடை கீழே விழுந்துவிட்டது.

நரி அதை வாயில் கவ்விக்கொண்டது ‘‘காக்கையே உன் நடனம் மிகவும் நன்றாக இருக்கிறது. நான் போய்வருகிறேன்'' என்று ஓடிப் போய்விட்டது.

ஏமாந்த காக்கை விழித்து விழித்து ஓடும் நரியைப் பார்த்தது.

# ஆட்டின் வால்



காளி கோயிலுக்கு முன்னால் ஓர் ஆடும் ஒரு மாடும் மேய்ந்துகொண்டிருந்தன. ஆடு மாட்டைப் பார்த்தது. மாடு ஆட்டைப் பார்த்தது. ஆடு மாட்டின் வாலைப் பார்த்து, ''இதற்கு வால் எவ்வளவு அழகாய் இருக்கிறது! நுனியில் குஞ்சம் கட்டினது போலல்லவா இருக்கிறது!'' என்று வியந்தது. மாடோ ஆட்டின் வாலைப்பார்த்து, ''எவ்வளவு அழகாக, சின்னதாக இருக்கிறது; நமக்குத்தான் எவ்வளவு நீளமான வால்?'' என்று

எண்ணியது. ஒவ்வொன்றும், ''நமக்கு அந்த மாதிரி வால் இருந்தால்?'' என்று ஏங்கியது.

இரண்டும் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டு ''இந்தக் காளியை நோக்கித் தவம் புரிவோம். நம் வால்களை மாற்றிக் கொள்வோம்'' என்று சொல்லித் தவம் புரிந்தன. காளியின் அருளால் ஆட்டுக்கு மாட்டின் வாலும், மாட்டுக்கு ஆட்டின் வாலும் வந்துவிட்டன. இரண்டு பிராணிகளுக்கும் ஒரே ஆனந்தம்.

ஒரு வாரம் ஆயிற்று. முன்பெல்லாம் மாடு தன் முதுகில் ஈ வந்து உட்கார்ந்தால் தன் நீண்ட வாலினாலேயே அவற்றை ஓட்டும். இப்போது அப்படி ஈ உட்கார்ந்தால் தன் குட்டையான வாலை ஆட்ட முடிந்ததே அன்றி ஈயை ஓட்ட முடியவில்லை! என்னடா இது? சங்கடமாக இருக்கிறதே!' என்று எண்ணியது.

ஆடு முன்பெல்லாம் முள் வேலிப் பக்கத்தில் போய் மேயும். அந்த வேலியைத் தாண்டிப்பாயும் பழைய நினைவோடு இப்போதும் வேலியைத் தாண்டியது. இப்போது வால் வேலியில் அகப்பட்டுக் கொண்டது அதை மெல்ல எடுப்பதற்குள் பெரும் பாடாகி விட்டது. ''ஏண்டா இந்தவாலை வாங்கிக் கொண்டோம்?'' என்று முணுமுணுத்தது.

கடைசியில் ஒரு நாள் காளி கோயில் முன் அவை இரண்டும் மீண்டும் சந்தித்தன. ''தம்பி, எப்படி இருக்கிறாய்?'' என்று மாடு ஆட்டை விசாரித்

தது. "அண்ணே, நீ எப்படி இருக்கிறாய்?" என்று ஆடு மாட்டை விசாரித்தது.

"அப்பப்பா! உன் வாலை நான் வைத்துக் கொண்டது தப்பாகப் போயிற்று. முதுகில் ஈ அமர்ந்தால் ஓட்ட முடியவில்லை. இதை வைத்துக்கொண்டு நீ எப்படித்தான் காலம் கடத்தினாயோ தெரியவில்லை" என்று வருத்தத்தோடு மாடு சொல்லியது.

"ஆமாம் அண்ணே! உன் வாலை வைத்துக் கொண்டு நான் படுகிற பாடு கொஞ்ச நஞ்சம் அல்ல. வேலியைத் தாண்ட முடியவில்லை. வால் எதிலாவது சிக்கிக்கொண்டால் படாத பாடு படுகிறேன். அவரவர்களுக்கு ஆண்டவன் எதைது கொடுத்திருக்கிறானோ, அதுதான் சரி" என்றது ஆடு.

"ஆமாம் தம்பி, 'ஆட்டுக்கு வாலை அளந்து தான் வைத்திருக்கிறான்' என்று சொல்கிறார்களே, அது எவ்வளவு சரியென்று இப்போது தான் தெரிகிறது" என்றது மாடு.

"சரி, நாம் இருவரும் இந்தக் காளியை வேண்டிப் பழையபடியே நம் வால்களைப் பெற்றுக்கொள்வோம்" என்று சொல்லி, இரண்டும் தவம் இருந்து இரண்டும் பழைபபடியே தம் வால்களைப் பெற்றுக்கொண்டன.

# அரசன் செய்த சோதனை



ஓர் அரசனுடைய சபையில் பல பணக்காரர்கள் இருந்து எப்போதும் அவனைப் புகழ்ந்து கொண்டே இருப்பார்கள். அவர்கள் உண்மையான அன்பு உடையவர்களா என்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று அரசன் நினைத்தான்.

ஒரு நாள் அவன் ஏழையைப் போல வேடம் பூண்டு கந்தைத் துணியைக் கட்டிக்கொண்டு தலையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். ஒரு செல்வருடைய வீட்டுக்குப்போய்,

"ஐயா பசிக்கிறது; கொஞ்சம் சோறு போடுங்கள்" என்றான். அந்தச் செல்வர், "உன்னைப் பார்த்தால் கொட்டாப்புளி மாதிரி இருக்கிறாய். எங்கேயாவது வேலை செய்து பிழைக்கக் கூடாதா? உனக்கு வெட்கமாக இல்லை; இங்கே சோறும் இல்லை; ஒன்றும் இல்லை போ" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

அரசன் மற்றொரு செல்வர் வீட்டுக்குப் போய்ச் சோறு கேட்டான். அவரோ, "இது சத்திரமா, கண்டவர்களுக்கெல்லாம் சோறு போட. போடா வெளியே" என்று துரத்தி விட்டார்.

அரசன் மூன்றாவது வீடு ஒன்றுக்குப் போனான். அவன் பிச்சை கேட்க வருகிறான் என்று எண்ணி அவனைக் கண்டவுடன் வாயிற் கதவைச் சாத்தி விட்டார்கள்.

அரசனுக்கு இவர்களுடைய நடத்தையைப் பார்த்து ஆச்சரியமாக இருந்தது. 'வாய் கிழியப் பேசினவர்கள் இப்படி இருக்கிறார்களே!' என்று வருந்தினான்.

பிறகு வேறு எங்காவது போகலாம் என்று நடந்து போய்க் கொண்டிருக்கையில் ஒரு கூலியாள் தான் கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்துக் கொண்டிருந்தான். அங்கே சென்ற அரசன், "ஐயா, மிகவும் பசியாக இருக்கிறது, கொஞ்சம் சோறு போடுங்கள்" என்றான்.

"இங்கே உட்காரப்பா!" என்று, சொல்லி அந்தக் கூலியாள் தான் கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்றை எடுத்து அரசன் கை நிறையக் கொடுத்தான். அரசன் அங்கேயே சுவைத்து உண்டான். "அப்பா, நீ பரம உபகாரி, பசித்து வந்தவருக்கு இல்லை என்னாமல் சோறு கொடுத்தாயே!" என்று சொன்னான். "நான் என்ன ஐயா செய்து விட்டேன்? ஒவ்வொருவர் பெரிய தர்ம சத்திரம் கட்டி வைத்திருக்கிறார்கள், நான் ஏதோ கொண்டு வந்திருந்த இந்தப் பழஞ்சோற்றில் சிறிது கொடுத்தேன். இது ஒரு பெரிய காரியமா?" என்றான் அந்தக் கூலியாள்.

"நீ தந்த சோற்றினால் என் பசி ஆறி விட்டது. நீ நெடுங்காலம் வாழ்வாயாக" என்று வாழ்த்தி, அவன் எங்கே இருக்கிறான் என்ற விவரத்தையும் கேட்டுக்கொண்டு சென்றான்.

மறுநாள் அரசன் அந்தக் கூலிக்காரனிடம் ஒரு சேவகனை அனுப்பி, "உன்னை அரசர் வரச் சொன்னார்" என்று சொல்லச் செய்தார். அந்தச் சேவகன் அவனிடம் சென்று அழைத்தபோது அவன் வெலவெலத்துப் போனான். 'நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே! அரசன் நம்மை எதற்காகக் கூப்பிடுகிறார்? என்று எண்ணி நடு நடுங்கிக் கொண்டே சேவகனுடன் சென்றான்.

அரசனுடைய அரண்மனைக்குள் சேவகன் அவனை அழைத்துச் சென்றான். உள்ளே அரசன் சிங்காசனத்தில் வீற்றிருந்தான். அருகில் இரு புற

மும் சேவகர்கள் கையில் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டதும் அவனுக்கு நடுக்கம் அதிகமாயிற்று.


அரசன் அவனைக் கண்டதும், "நேற்று நீ ஓர் ஏழைக்குச் சோறு கொடுத்தாயா?" என்று கேட்டான்,

"கொடுத்தேன், என்னிடம் பழைய சோறு தான் இருந்தது. அதைத்தான் கொடுத்தேன்" என்றான்.

"சரி, அப்படி உட்கார்" என்று சொன்னான். அந்தக் கூலிக்காரன் நடு நடுங்கியபடியே உட்கார்ந்தான்.

"நேற்று உன்னிடம் வந்த ஏழை நான்தான். நீ வஞ்சகம் இல்லாமல் உன்னுடைய சோற்றைப் பகிர்ந்து கொடுத்தாய். நீ செய்த உபகாரத்தை மெச்சுகிறேன். இனிமேல் நீ ஏழையாக வாழ வேண்டாம், உனக்கு நிலங்களைத் தருகிறேன்" என்று சொல்லிச் சில நிலங்களை அவனுக்குக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தான்.

சபையில் இருந்த செல்வர்கள் எல்லாம் இதைக் கேட்டுத் திகைத்தார்கள். ஊரில் உள்ளவர்களோ அரசனுடைய பெருந்தகையைப் பாராட்டி வாழ்த்தினார்கள்.



# கிண்டியாய நமஹ

அந்தப் பிராமணர் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து நீராடிவிட்டுக் கையில் ஒரு பாத்திரத்தை ஏந்திக்கொண்டு வீடு தோறும் சென்று 'கிருஷ்ணாய நமஹ' என்று சொல்லி நிற்பார். வீட்டுக்காரர் போடும் அரிசியை வாங்கிக் கொள்வார். பல வீடுகளில் கிடைக்கும் அரிசியைக் கொண்டு அவர் ஜீவனம் நடத்தி வந்தார்.

ஒருநாள் ஒரு வீட்டிற்குள் சென்று, ''கிருஷ்ணாய நமஹ'' என்று சொல்லி நின்றார். கூடத்தில் யாரும் இல்லை. சற்றும் முற்றும் பார்த்தார்.

யாரும் இல்லை. அங்கே ஒரு கிண்டி இருந்தது. அதை எடுத்துத் தம் பையில் போட்டுக்கொண்டு புறப்பட்டு விட்டார்.

பிறகு வீட்டுக்காரர்கள் கூடத்தில் இருந்த கிண்டியைக் காணாமல் எங்கும் தேடினார்கள். அது கிடைக்கவில்லை.

இரண்டு நாட்கள் ஆயின. அந்த இரண்டு நாளும் அந்தப் பிராமணர் அந்த வீட்டுக்குப் போகவில்லை. மூன்றாவது நாள் போனார். அங்கே நின்றபோது அவருடைய மனதில் கிண்டியைத் திருடின நினைவு தோன்றியது. மார்பு 'படக் படக்'கென்று அடித்துக்கொண்டது. "கிருஷ்ணாய நமஹ" என்று சொல்லவேண்டியவர் "கிண்டியாய நமஹ" என்று சொல்லிவிட்டார். அவர் மனதில் இருந்தது அவரை அறியாமலே வாயில் வெளிப்பட்டுவிட்டது.

அதைக்கேட்ட வீட்டுக்காரர்கள் 'இவர் என்ன கிண்டியாயநமஹ, என்றாரே, இவரேகிண்டியைத் திருடியிருப்பாரோ?' என்று எண்ணி, "ஓய்! பிராம்மணா, கிண்டி எங்கே? என்று அதட்டிக் கேட்டார்கள். முன்பின் இத்தகைய காரியத்தைச் செய்து அறியாதவராதலின் அவர் தடுமாறினார். கடைசியில் கிண்டியைத் தாமே எடுத்துச் சென்றதாகவும் மறுநாள் கொண்டு வந்து கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்.

மறுநாள் கிண்டி வந்து சேர்ந்தது. 'கிருஷ்ணாய நமஹ, 'கிண்டியாய நமஹ, ஆனதை எண்ணி வீட்டுக்காரர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.




அசட்டு அனந்தன் தன் உறவினர் வீட்டுக்குப் போயிருந்தான். அங்கே அவனுக்கு அன்று பண்ணியிருந்த கொழுக்கட்டையைத் தந்தார்கள். அதைச் சுவைத்து உண்டான். தன் மனைவியைக் கொழுக்கட்டை பண்ணச் சொல்லிச் சாப்பிட வேண்டும் என்று தீர்மானித்தான், அங்கிருந்து புறப்பட்டவன்கொழுக்கட்டையையேநினைத்துச் சொல்லிக் கொண்டு போனான்.

போகும் வழியில் ஒருவன் ஓரிடத்தைத் தாண்டும்போது, "அத்திரிமாக்கு" என்று சொன்னபடி தாண்டினான். அதைக் கேட்ட அனந்தனுக்குக் கொழுக்கட்டை என்றது மறந்து போய் 'அத்திரிமாக்கு' என்றதைப் பிடித்துக் கொண்டான் "அத்திரிமாக்கு, அத்திரிமாக்கு" என்று ஜபித்துக் கொண்டே வீட்டிற்குப் போனான்.


போனவன், தன் மனைவியைப் பார்த்து, "இன்றைக்கு அத்திரிமாக்குப் பண்ணிக்கொடு" என்று கேட்டான். "அவர்கள் வீட்டில் பண்ணிப் போட்டார்கள். எவ்வளவு நன்றாக இருந்தது தெரியுமா? நீயும் அத்திரிமாக்குப் பண்ணு" என்றான்.

"உங்களுக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது. அத்திரிமாக்காவது! கத்திரி மாக்காவது? அப்படி ஒன்றும் கிடையாது" என்றாள் அவள்.

அனந்தனுக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் சொல்கிறேன், நீ பண்ண முடியாது என்கிறாயே!" என்றுசொல்லி அவளை நையப்புடைத்தான். அவள் கைகளிலும், தோள்களிலும் வீக்கம் உண்டாகிவிட்டது.

அப்போது பக்கத்து வீட்டு அம்மாள் அங்கே வந்தாள். "என்னடி இது? உன் உடம்பில் கொழுக்கட்டை மாதிரி வீங்கியிருக்கிறது?" என்று கேட்டாள். அப்போது அனந்தன் காதில் அது விழுந்தது. கொழுக்கட்டை என்றதைக் கேட்ட

தும் அவனுக்குத் தான் உண்டது கொழுக்கட்டை என்று நினைவு வந்தது. உடனே, "ஆமாண்டி, அந்தக் கொழுக்கட்டையைத்தான் சொல்ல வந்தேன். அது மறந்து போய், யாரோ ஒருவன் வழியில் சொன்ன அ த் தி ரி ம ா க் கு என்ற வார்த்தையைப் பிடித்துக்கொண்டேன். தெரியாமல் அடித்துவிட்டேன்" என்று அவளைத் தடவிக்கொடுத்தான். அன்று அவனுக்குக் கொழுக்கட்டை கிடைத்தது. ஆனால் அவள் உடலில் ஏற்பட்ட கொழுக்கட்டை போன்ற வீக்கம் ஆற சில நாள் ஆயின.



# கனவு பலித்தது

ஒவ்வொரு நேரமும் அந்தச் சிவாலயத்தில் சுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்காகக் குடம் குடமாகக் காவிரி நீரைக் கொண்டு வந்து கொட்டினாள், கனகவல்லி. ஒரு நாள் 'ஏன் அம்மா, இப்படித் தீர்த்தத்தை எடுத்து வந்து கொட்டுகிறாய், ஏதாவது பிரார்த்தனையாக என்று கேட்டார் குருக்கள்.

"ஆமாம், பிரார்த்தனை தான்" என்றாள் கனகவல்லி.

"என்ன பிரார்த்தனை?" என்று கேட்டா குருக்கள்.

“வாய்விட்டுச் சொல்வதற்கில்லை” என்று அவள் சொல்லவே, குருக்கள் மேலும் அவளைக் கேள்வி கேட்க வேண்டாம் என்று சும்மா இருந்து விட்டார்.

“என்னடி இது? ஒவ்வொரு நாளும் மணிக் கணக்காகத் தீர்த்தத்தைக் கொண்டுபோய்க் கோயிலுக்குக் கொடுக்கிறாயே! எதற்காக? உன் மனசிலே என்ன இருக்கிறது?” என்று அவளுடைய அம்மாளே கேட்டாள்.

“அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன், இப்போது எனக்குப் பசிக்கிறது. சாதம் போடு” என்று சொல்லித் தாய் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் மழுப்பினாள்.

“யாராவது ராஜகுமாரன் வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவேண்டும் என்ற ஆசையோ! பேசாமல் உன் மாமன் மகனைக் கட்டிக்கொண்டு சந்தோஷமாய் இரு” என்றாள் தாய். அவளுடைய அண்ணன் மகன் சுப்பனைத் தான் அவள் குறிப்பிட்டாள்.

“அந்தச் சுப்பனையா?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள் கனகவல்லி.

“ஏன், அவனைவிட்டால் உனக்கு ஆகாயத்திலிருந்து மாப்பிள்ளை குதிக்கப் போகிறானோ?” என்றாள் தாய்.

கனகவல்லி பதில் பேசவில்லை. சாப்பிடப் போய்விட்டாள்.

'இந்தப்பெண் என்ன கனவு காண்கிறதோ, தெரியவில்லையே?' என்று மனதுக்குள் முணு முணுத்துக் கொண்டாள் தாய்.

அந்த நாட்டு அரசனுடைய குமாரன் ஒரு நாள் அந்தக் கோவிலுக்கு வந்தான். கனகவல்லி குடம் குடமாகக் காவிரி நீர் எடுத்து வந்து கொட்டுவதைக் கவனித்தான்.

"ஏன் அம்மா, உனக்கு ஏதாவது பிரார்த் தனையா? ஒவ்வொரு நாளும் இப்படிச் செய்து வருகிறாயா?" என்று அவளைக் கேட்டான்.

"ஆமாம்" என்று சுருக்கமாகப் பதில் அளித் தாள் அவள்.

"உன் பிரார்த்தனை நிறைவேறட்டும்!" என்று வாழ்த்திவிட்டு அவன் போனான். அவனுக்குத் தெரியுமா, அவள் மனதில் என்ன இருக்கிறது என்பது?

அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். பிறகு ஒரு பெருமூச்சு விட்டாள்.

அவளுடைய மாமன் மகன் சுப்பன் பார்ப்ப தற்கு லட்சணமாக இருக்கமாட்டான். சப்பைக் காலும், கோணவாயும், ஒன்றரைக் கண்ணுமாக நிற்பான். அவனைப் பார்க்க அவளுக்கு அருவருப்

பாக இருந்தது. 'இவனையா கட்டிக் கொள்வது? கடவுளே!' என்று பெருமூச்செறிவாள்.

வேறு ஒரு நாள் அந்த ராஜகுமாரன் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு கோவிலுக்கு வந்தான். அங்கே இருந்த கனகவல்லியைப் பார்த்து மெல்லிய குரலில், "என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா? ' என்று கேட்டான்.

அவள் அசப்பில், "ஹூம்!" என்றாள். அவள் அதை நினைத்துச் சொல்லவில்லை. ஆனாலும் அவள் வாயிலிருந்து அப்படி வந்துவிட்டது.

"உன் அப்பாவிடம் பேசி உன்னை என் குதிரை மேல் ஏற்றி என் ஊருக்கு அழைத்துப் போவேன்.என் அப்பா,அம்மா உன்னைப் பார்க்க வேண்டாமா?"

இப்போது அவள் அவன் வார்த்தைகளை நன்றாகப் புரிந்துகொண்டு, "ஆகட்டும்" என்று சொன்னாள். ராஜகுமாரனுக்கு ஒரே சந்தோஷம்.

அவன் தான் சொன்னபடியே கனகவல்லியின் தாய் தந்தையரைப் பார்த்துத் தன் கருத்தைச் சொன்னான். தான் அரசகுமாரன் என்பதையும் தெரிவித்தான்.

"நாங்கள் ஏழைகள். ஓர் அரசகுமாரருக்குப் பெண்ணைக் கொடுக்கும் அந்தஸ்து எங்களுக்கு இல்லையே!" என்று அவர்கள் சொன்னார்கள்

''அவள் அழகு ஒன்றே போதுமே! மற்ற தெல்லாம் எதற்கு? சரி; நான் அடுத்த வாரம் வருகிறேன். இவளைத் தைரியமாக என்னோடு அனுப்புங்கள். என் தாய் தகப்பனாருக்கு இவளைக் காட்டி என் கருத்தைச் சொல்வேன். அவர்கள் என் விருப்பத்துக்கு மாறாக ஒன்றும் சொல்ல மாட்டார்கள். அடுத்த வாரம் இவளை அனுப்பத் தயாராக இருங்கள், உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் இதோ என்னுடைய முத்திரை மோதிரம். இதைத் தந்து விட்டுப் போகிறேன்'' என்று சொல்லித் தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அவர்களிடம் கொடுத்தான்.

அவர்கள் சிறிதே யோசித்தார்கள், பிறகு வலிய வரும் சீதேவியை உதைத்துத் தள்ளக் கூடாது. என்று அவனுக்குத் தம்முடைய சம்மதத்தைத் தெரிவித்தார்கள்.

அடுத்த வாரம் அரசகுமாரன் குதிரையின் மேல் வந்தான். அவன் வருவதை எதிர்பார்த்திருந்த கனகவல்லியின் தாய் தந்தையர் அவளை அவனுடன் அனுப்பினார்கள். அவன் அவளைத் தன் குதிரையின் மேல் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

புறப்பட்ட அடுத்த கணத்தில், ''ஓய், நில், நில்'' என்ற சத்தம் கேட்டது. சப்பைக்கால் சுப்பன்தான் அப்படிக் கத்தினான். தனக்காக

இருந்த பெண்ணை அரசகுமாரன் தட்டிக் கொண்டு போகிறானே என்ற ஆத்திரம் அவனுக்கு. குதிரையைத் தொடர்ந்து ஓடினான். வழியில் ஒரு கல் தடுக்கி விழுந்து விட்டான். நெற்றியில் காயம்பட்டு இரத்தம் வழிந்தது.

குதிரையில் அப்போதுதான் சிறிது தூரம் போயிருந்த கனகவல்லி திரும்பிப் பார்த்தாள். சுப்பன் அடிபட்டு விழுந்திருப்பதைக் கண்டாள். உடனே, ''நிறுத்துங்கள், குதிரையை நிறுத்துங் கள்' என்று கத்தினாள். அரசகுமாரன் என்னவோ ஏதோ என்று பயந்து குதிரையை நிறுத்தினான்.

கனகவல்லி, ''என் மாமன் மகன் அடிபட்டுக் கிடக்கிறான். இரத்தம் வழிகிறது, அவனை இந்த நிலையில் விட்டுவிட்டுப் போய் நாம் கல்யாணம் செய்துகொள்வதா? அவனை உடனே கவனிக்க வேண்டும்'' என்று படபடப்பாகக் கூறி னாள்.

''சரி உன் இஷ்டம் போல் செய், நான் அடுத்த வாரம் வருகிறேன்'' என்று சொல்லி அவளை அவன் இறக்கிவிட்டுப் போய்விட்டான்.

கனகவல்லி சுப்பனை அணுகினாள். அவன் மயக்கம் போட்டு விழுந்து கிடந்தான். அவன் முகத்திலுள்ள இரத்தத்தைத் துடைத்து, முகத் தில் தண்ணீர் விட்டு அலம்பி, மெல்ல அவனை அழைத்துக் கொண்டு போனாள். ஓர் ஆஸ்பத்திரி

யில் அவனைச் சேர்த்து, வேண்டிய பணிவிடை களைச் செய்தாள். அவனுக்குச் சரியான நினை வில்லாமல் நனவும் கனவும் போன்ற ஒரு மயக்க நிலையில் இருந்தான்.

சில நாட்களில் அவனுக்கு மயக்கம் தெளிந்தது. கண்ணை விழித்துப் பார்த்தான். கனகவல்லி நின்றிருந்தாள். ''கனகவல்லி! நீயா!'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

''ஆமாம். உங்களை இந்த நிலையில் விட்டு விட்டுப்போக என் மனசு வரவில்லை. இங்கே தங்கி விட்டேன்.''

''அப்படியா? இந்த ஏழையின் மேல் உனக்கு அவ்வளவு கருணையா? அரசகுமாரனோடு போகாமல் எனக்காக நின்று விட்டாயா? நீ என் தாய்; என் தெய்வம்! உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று முட்டாள்தன மாக எண்ணினேனே! உன்னைத் தடுக்க வந்தேனே! அதற்கு ஆண்டவன் எனக்குத் தண்டனை அளித்து விட்டான்! சிறிதே ஆசு வாசப்படுத்திக் கொண்டான். பிறகு, ''அது சரி அந்த ராஜகுமாரனை ஏன் விட்டுவிட்டாய்?அவன்; உன்னை ஆசையோடு அழைத்துக் கொண்டு போனானே; கைக்கு எட்டியது வாய்க்கு எட்டா மல் போய்விட்டதா?'' என்று கேட்டான்.

கனகவல்லி புன்முறுவல் பூத்தபடியே, ''அப் படி எல்லாம் ஒன்றும் இல்லை. அவர் மறுபடியும்

வந்து என்னை அழைத்துக்கொண்டு போய்க் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்லியிருக் கிறார். மறுபடியும் வருவார்'' என்றாள்.

''அப்படியா! மிகவும் சந்தோஷம். உனக்கு ஏற்றபடி ராஜகுமாரனே கிடைத்திருக்கிறான். நீ அவனை மணந்து கொண்டு சௌக்கியமாக இரம்மா!'' என்று சொல்லும்போதே அவன் கண் களில் ஆனந்த பாஷ்யம் துளிர்த்தது.

பிறகு கனகவல்லிக்கும் அரசகுமாரனுக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! அவள் கனவு பலித்தது.



# கத்திரிக்காய் ஜுரம்

மட்டியப்பன் என்ற குடியானவன் தன்னுடைய வீட்டுப் புறக்கடையில் நிறைய கத்தரிச் செடி வைத்துப் பயிர் பண்ணியிருந்தான். அடிக்கடி அந்தச் செடிகளைக் கவனித்துப் பார்த்துப் பராமரித்து வந்தான். செடிகளெல்லாம் தளதள வென்றுவளர்ந்து பூத்துக் காய்க்கத்தொடங்கின. நல்ல மண்ணாக இருந்தமையாலும் மட்டியப்பனுடைய கவனிப்பினாலும் ஒவ்வொரு செடியும் குலுங்கக் குலுங்கக் காய்த்தது.

மட்டியப்பன் பிறருக்கு மனமார ஒரு பொருளைத் தரமாட்டான். அந்தக் கத்தரிக்காயைப் பறித்து, வெளியூர்ச் சந்தைக்குப் போய் விற்றுக் காசு சம்பாதித்தான். தன்னுடைய வீட்டிற்குக் கூட அதை உபயோகிக்கவில்லை.

அந்த ஊர் வைத்தியர் எல்லாருக்கும் வேண்டியவர். அவர் பேசும் வார்த்தைகளிலேயே பாதி வியாதி தீர்ந்துவிடும். வைத்தியத்திலும் அவர் திறமை பெற்றவர். நல்ல அநுபவமும், புத்தி கூர்மையும் உடையவர். அவருடைய மகள் கர்ப்பமாக இருந்தமையால் பிரசவத்திற்காகப் பிறந்தகத்திற்கு வந்திருந்தாள். அவள் வாய்க்கு வேண்டிய உணவுகளையும் தின்பண்டங்களையும் வைத்தியர் மனைவி செய்து கொடுத்தாள். ஒருநாள் அவள் கத்தரிக்காய் வேண்டுமென்று ஆசைப்பட்டாள். அவளுடைய தாய் வைத்தியரிடம் தெரிவித்தாள்.

"நம்ம ஊர் மட்டியப்பன் வீட்டில் கத்திரிச் செடி பயிர் பண்ணியிருக்கிறார்களாம். நன்றாகக் காய்க்கிறதாம். கொஞ்சம் கேட்டு வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்று அவள் சொன்னாள்.

வைத்தியர் மட்டியப்பனிடம் போய்க் கேட்டார். மற்ற யாராக இருந்தாலும் வைத்தியர் கேட்பதைக் கொடுக்க மறுக்க மாட்டார்கள். மட்டியப்பனுக்கோ கொடுக்க இஷ்டம் இல்லை வைத்தியரிடம் விலை கேட்பதும் நன்றாக இராது.

அவன், "நேற்றுத்தான் ஒரு பிஞ்சு விடாமல் பறித்துக் கொண்டு போய்ச் சந்தையில் விற்று விட்டு வந்தேன்" என்று ஒரு பொய்யை எடுத்து விட்டான்.

"இருக்கட்டும், பிறகு பார்த்துக் கொள்ள லாம்" என்று சொல்லி வைத்தியர் போய்விட்டார்.

மட்டியப்பனுக்கு அப்போது ஒரு யோசனை உண்டாயிற்று; 'இப்போதைக்கு ஒரு பொய்யைச் சொல்லி அனுப்பிவிட்டோம். நாளைக்கு வந்தால் என்ன செய்வது?' என்று எண்ணி மிகவும் கவலைப்படலானான். கடைசியில் ஒரு தீர்மானத் துக்கு வந்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே அடுத்த வாரம் வைத்தியர் அவனிடம் வந்து கத்தரிக்காய் கேட் டார். மட்டியப்பன் ஒரு பதிலை முன்பே யோசித்து வை நிருந்தான். அவன் தன் தலை யைச் சொறிந்து கொண்டே, "நான் சொல்லு கிறேன் என்று கோபித்துக்கொள்ளக் கூடாது. அன்றைக்கே நான் விஷயத்தைச் சொல்லியிருப் பேன். எங்கள் வீட்டுக் கத்தரிக்காயை இந்த ஊராருக்குக் கொடுக்கக்கூடாது" என்றான்.

வைத்தியர் ஆச்சர்யம் அடைந்தவராய் "என்ன காரணம்?" என்று கேட்டார்.

"எங்கள் பாட்டி செத்துப் போகும் போது கத்தரிக்காய் கறி வேண்டும் என்று கேட்டாளாம். அப்போது இந்த ஊரில் இரண்டு மூன்று வீடுகளில் கத்தரிச்செடி பயிரிட்டிருந்தார்களாம். என் தகப்பனார் அவர்களைக் கத்தரிக்காய் கேட்ட போது ஒருவராவது கொடுக்கவில்லையாம். என் பாட்டி தன் ஆசை நிறைவேறாமலே செத்துப் போய் விட்டாள். என் தகப்பனார், 'இனிமேல் நானே வீட்டில் கத்தரிச் செடி பயிர் பண்ணப் போகிறேன்; இந்த ஊரில் யார் கேட்டாலும் கொடுக்கப் போகிறதில்லை' என்று சபதம் செய்து கொண்டார். என்னிடம் இந்த விஷயங்களை எல்லாம் சொல்லித் தம் சபதத்தை நானும் காப்பாற்ற வேண்டும்' என்றார். அதனால்தான் நான் உங்களுக்குக் கொடுக்க முடியவில்லை" என்று சொல்லி வருத்தப்படுபவனைப் போலப் பாசாங்கு செய்தான்.

அவன் சொல்வதெல்லாம் பொய் என்பது வைத்தியருக்கா தெரியாது? அவர் பேசாமல் வந்த வழியே திரும்பி வீட்டுக்குப் போனார். போகும் போதே 'இந்த மடையன் என்னை ஏமாற்றப் பார்க்கிறான்; பார்க்கலாம். எனக்கும் ஒரு காலம் வரும்' என்று எண்ணிக் கொண்டார்.

இரண்டு மாதங்கள் ஆயின. ஒரு நாள் மட்டியப்பன் அவசர அவசரமாக வைத்தியரிடம் ஓடி வந்தான். "ஐயா, ஐயா! என் மகளுக்குக் கடுமையான ஜுரம் அடிக்கிறது. எங்கள் வீட்டில் கைப்

பழக்கமான கஷாயமெல்லாம் போட்டுக் கொடுத்தோம். ஜுரம் நிற்கவில்லை. கல்யாணமாகி ஒரு வருஷம்தான் ஆச்சு. ஐயா; நீங்கள் வந்து பார்த்துக் காப்பாற்ற வேண்டும்'' என்று அழாக் குறையாகச் சொன்னான்.

''அப்படியா நீ நல்ல மனிதனாயிற்றே! உனக்குக் கஷ்டம் வரக்கூடாதே. நீ பயப்படாதே, நான் எப்படியும் சொஸ்தம் செய்து விடுகிறேன். நான் கேட்கும் மருந்துச் சரக்குகளை மாத்திரம் விடாமல் வாங்கித் தா'' என்று சொல்லி, அவன் வீட்டுக்குப் போனார். நோயாளியின் கையைப் பார்த்தார். பிறகு ஒரு மாத்திரையைத் தேனில் குழைத்துக் கொடுத்துவிட்டு, ''இந்த ஜுரம் மிகவும் பொல்லாதது, இதற்கு ஒரு கஷாயம் போட வேண்டும். கத்தரி வேரும் வேறு சரக்கும் காய்ச்சி அந்தக் கஷாயத்தைத் தயார் செய்ய வேண்டும்'' என்றார்.

''கத்தரி வேர்தானா பிரமாதம்! நம் வீட்டுக் கொல்லையிலே இருக்கிறது'' என்றான் மட்டியப்பன்.

''ஒரு மணங்கு வேர் வேண்டும். நான் வீட்டுக்குப் போய்க் கஷாயம் போட ஏற்பாடு செய்கிறேன். நீ வேர் அனுப்பு'' என்று உத்தரவு செய்துவிட்டு வைத்தியர் மிடுக்காகத் தம் வீட்டுக்கு நடந்தார்.

மட்டியப்பன் அவசர அவசரமாகத் தன் வீட்டுப் புறக்கடைப்பக்கம் போனான். வேகமாக இருபது முப்பது கத்தரிச் செடிகளைப் பிடுங்கி வேரை வெட்டிக் கையில் எடுத்துக்கொண்டு வைத்தியர் வீட்டுக்கு ஓடினான். வைத்தியருக்கு முன் அந்த வேரைப் போட்டபோது அவர், "இது எந்த மூலைக்கப்பா போதும்? இதைப் போல இன்னும் பத்துப்பங்கு வேணுமே. இந்த வியாதிக்கு வழுதுணை வெப்பு என்று பேர். சரியானபடி கஷாயம் செய்து கொடுக்காவிட்டால் கேட்காதே. பாவம்! உனக்கு ஒரு மகள். அவளுக்கு இப்படியா வரவேண்டும்!" என்றார்.

"எங்கள் வீட்டுக் கொல்லையிலுள்ள செடியெல்லாம் பிடுங்கிக் கொண்டுவந்து விடுகிறேன் எப்படியாவது என் மகள் பிழைத்தால் போதும். நீங்கள்தான் தெய்வமாக இருந்து காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லி மட்டியப்பன் தன் வீட்டிற்கு ஓடினான்.

தன் வீட்டில் உள்ளவர்களையும் கூப்பிட்டு எல்லாக் கத்தரிச் செடிகளையும் பிடுங்கினான். வேரை நறுக்கிக் கட்டி வைத்தியரிடம் கொண்டு போய்ப் போட்டான்.

"நல்ல வேளை! அகப்படக்கூடிய சரக்காக இருக்கிறதே. அது உன் அதிர்ஷ்டம்தான், மலைச் சரக்கு ஏதாவது வேண்டுமென்றால் நாம் என்ன

செய்வது? சரி இனிமேல் நீ பயப்பட வேண்டாம். இன்னும் ஒரு வாரத்தில் உன் மகள் சௌக்கியம் அடைவாள்" என்றார்.

வைத்தியர் ஒரு கஷாயத்தை ஒவ்வொரு வேளையும் நோயாளிக்குக் கொடுத்து வந்தார். ஆனால், அந்தக் கஷாயத்திற்கும் கத்தரி வேருக்கும் சம்பந்தமே இல்லை. 'வழுதுணை வெப்பு' என்பதற்குக் கத்தரிக்காய்ஜுரம் என்று அர்த்தம். வைத்தியர் தாமாகச் சிருஷ்டித்த அந்தப் பெயரை மறை பொருளாகச் சொன்னார். மட்டியப்பன் அதைத் தெரிந்து கொள்ளவில்லை.

அவன் மகள் சௌக்கியம் அடைந்தாள். அவன மனைவி அவனைப் பார்த்து "அன்றைக்கு வைத்தியர் நாலு கத்தரிக்காய் கேட்டார்; கொடுக்க மாட்டேன் என்று சொன்னோமே, இப்போது வேரோடு கத்தரிச்செடி எல்லாவற்றையும் நாமே பிடுங்கினோமே!" என்றாள்.

"அப்போது புத்தி இல்லை!" என்று வருந்தப் பட்டான் மட்டியப்பன்.

# வினாக்கள்

1. கோபாலன் தேன்பாகு சாப்பிடுவதற்காக என்ன செய்தான்?
2. புன்செய் நிலத்தில் குமரன் கடலைக்காய்களைத் தேடியது எப்படி?
3. வேலை தேடிய குப்பன் இட்டிலிக் குப்பன் ஆனது எப்படி?
4. முனிவர் செய்த வேள்வியின் சிறப்பு என்ன? அரசன் செய்த வேள்வி என்ன ஆயிற்று?
5. மிளகாய்ப் பொடி காக்கைக்கு எவ்வாறு உதவிற்று?
6. கங்கை நீரில் மூழ்கியவரை மீட்பதற்குத் தன் பாவம் போக்க என்ன செய்தார்?
7. புத்த சன்யாசி கண்ணாடியில் பார்த்து என்ன சொன்னார்?
8. பாட்டுப் பாட காக்கை என்ன செய்தது?
9. ஆட்டிற்கு மாட்டின் வாலினால் வந்த தொந்தரவு என்ன?
10. அரசன் செய்த சோதனை என்ன? முடிவு என்ன?
11. இண்டியாய நமஹ என்று பிராமணர் ஏன் சொன்னார்?
12. சுப்பன் கனவல்லியிடம் கூறியது என்ன?
13. 'அத்திரிமாக்கு' என்று சொன்னது யார்?
14. மருத்துவர் கத்திரிக்காய் ஜுரத்தின் கஷாயத்துக்கு என்ன வேண்டுமென்று கேட்டார்?

அமுத நிலையம்

ஜப்போனிகா ☎ 865331